

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சீனா நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 7 விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் 22 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உடனுள்ளனர்.

### சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# தமிழ்நாட்டை சேர்ந்த வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.3.80 கோடி ஊக்கத் தொகை!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.4-

சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 7 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.3.80 கோடி உயரிய ஊக்கத்தொகையும், போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.22 இலட்சம் ரூபாயும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சீனா நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 7 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் 22 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினார்.

சீனா நாட்டின் ஹாங்சூவில் கடந்த 22.10.2023 முதல் 28.10.2023 வரை நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 7 விளையாட்டு வீரர் வீராங்கனைகள் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 11 வெண்கலம், என மொத்தம் 15 பதக்கங்களை வென்றனர்.

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த – பாரா தடகளப் போட்டியில் 1 தங்கப் பதக்கம் வென்ற டி.சோலைராஜ், 1 வெள்ளிப் பதக்கம் வென்ற டி. மாரியப்பன் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற முத்து ராஜா, பாரா பேட்மிண்டன் போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற எம். துளசிமதி, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற மனிஷா ராமதாஸ், 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற சிவராஜன் சோலைமலை, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற எஸ். நித்யா ஸ்ரீ சுமதி ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்து மீனா, பி.மனோஜ், மனோஜ் குமார், ஷேக் அப்துல் காதர், ஆர். பாலாஜி, ஷிரந்தி தாமஸ், ஆர். ருத்திக், வி. சந்தியா, ஆர். கனிஷ்ஸ்ரீ பிரேமா, ஷரோன் ரேச்சல் அபி மற்றும் ஆர். கஸ்தூரி ஆகிய 11 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" சார்பில் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 22 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, முதன்மை நிர்வாக அலுவலர் வே.மணிகண்டன் மற்றும் பொது மேலாளர் திருமதி. மெர்ஸி ரெஜினா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு வரவேற்பு

சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 7 வீரர் வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்கள் நேற்று (03.11.2023) காலை சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வருகை தந்தனர். அவர்களுக்கு தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### வேளாண்மைத் துறையில் டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 213 தெரிவாளர்களுக்குப் பணி நியமன ஆணை!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, நவ.4-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (03.11.2023) வேளாண்மை ஆணையரகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 213 தெரிவாளர்களில் 30 சுருக்கெழுத்து தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணையையும், 2021-2022 ஆண்டில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் அதிக மகசூல் பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கியும், பூச்சிக் கொல்லி அமலாக்க மேலாண்மை தகவல் இணையதளத்தை தொடங்கியும் வைத்தார்.

தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதற்கு போதிய தொழில்நுட்ப அலுவலர்களையும், நிர்வாகப் பணியாளர்களையும் நியமனம் செய்து வருகிறது. அந்த வகையில் 30 சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

விவசாயிகள், வேளாண்மை உழவர் நலத்துறை வழங்கி வரும் தொழில்நுட்பங்களை சரிவர கடைபிடித்து, அதிக மகசூல் பெறுவதை ஊக்குவிப்பதற்கு பயிர் விளைச்சல் போட்டியை நடத்தி வருகின்றது.

2021-22ஆம் ஆண்டு நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், சோளம், கம்பு, துவரை, பச்சைப்பயிறு, மற்றும் உளுந்து பயிர்களில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி ஆலைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங்களுக்கு உரிமங்களை எளிய முறையில் இணையதளம் மூலம் பெறுவதற்கு, பூச்சிக்கொல்லி உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் மேலாண்மை இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நீண்ட இழைப் பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைத்திடவும் தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான தரமான பருத்திப் பொதிகளை கிடைத்திடவும் தென்னிந்திய நூற்பாலைகள் அசோசியேசன் (SIMA) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் விஞ்ஞானிகள் வேளாண் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்திட உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில், விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா நெல் மற்றும் இதர பயிர்கள் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் சில மாவட்டங்களில் மழைப்பொழிவு குறைவாக உள்ள நிலையில் விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இவ்விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்வதன் மூலம் விதைப்பு செய்ய இயலாமை என்னும் இடர் நிகழ்வின் கீழ் இழப்பீட்டு தொகை பெற இயலும்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச்செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை), திருமதி. ஸ்ரேயா பி.சிங், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

